**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விஷத்தைக் கலப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சமுதாயத்தினுடைய விஷம். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு மனமாற்றம் ஏற்படவேண்டும். மதவேற்றுமை, ஜாதி வேற்றுமை, தீண்டாமை ஆகிய கொடிய நச்சுப் பாம்பு மனப்பான்மையை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் யாவும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். அதிலே அவர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* 38 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a scheme for protected water supply for Dharmapuri district has been prepared by the Government; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) மத்திய அரசு தொடங்கியுள்ள கிராமப்புற குடிநீர் வழங்கு விரைவுத்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவது குறித்து திட்டத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வசதி வாரியம் இதுவரையில் 644 மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளது. இவற்றுள் 41 மதிப்பீடுகளுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்து, அந்த பணிகள் நடந்தேறி வருகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, Dharmapuri district is a most backward district and I am thankful to the Government for declaring it as such and taking up this programme there. May I know from the Hon. Minister when this scheme will be started, when it will be implemented, especially in the areas like Denkanikota in Hosur Taluk where many epidemic diseases are spreading?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மொத்தம் 41 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புக்கொண்டதில் 1972-73-ஆம் ஆண்டிலே 22 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. 1973-74-ஆம் ஆண்டிலே 10 திட்டங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 644 திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்த

வரையிலே தேவை என்று மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டு மத்திய அரசு ஒவ்வொரு பட்டியலாக ஒப்புதல் தருகிறது. ஆகவே ஒப்புதல் வந்தவுடன் அவை விரைவாக நிறைவேற்றப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district many parts like Hosur and Denkanikotta which are hiily are experiencing great scarcity of drinking water in many villages. The wells are deep and the water in the wells is so little that ladies shed tears to draw water and the quantity of from them their tears is greater than the water they draw from the wells. The small Panchayats there say that they have no money for paying for water-supply schemes. The question is pending for long. May I know from the Hon. Minister for Health whether some arrangements would be made to give protected water-supply to these suffering tiny villages, irrespective of the money paid by the Panchayats?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தத் திட்டத்திலே இந்தப் பிரச்சனை வரவில்லை; ஆனால் பஞ்சாயத்துக்கள் நடத்து கின்ற சில திட்டங்கள் இருக்கின்றன. அவைகளிலேதான் பஞ்சாயத்து நிதிவசதிபற்றிய பிரச்சனை வரும். பொதுவாகவே சலுகை காட்டப்படவேண்டிய மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்ற அளவிலே தருமபுரி மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்ற காரணத்தினலே இப்படிப்பட்ட திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்படுகின்றன.

அரிசன மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள்

*** 39 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவர் விடுதிகளுக்கு படிப்படியாக நிரந்தரமாக சொந்தக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) அரிசன நல இல்லங்களுக்கு படிப்படியாக சொந்தக்கட்டடங்கள் கட்ட அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது.